1714

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 SEP 1927
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்ணப்பரம்மானை.

ஈரோடு

மகாஜன ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

இயற்றியது.

ஸ்ரீ சங்கர் அச்சாபீஸ்,

ஈரோடு.

பதிப்புரிமை.] 1927 [விலை 4 அணா

2341
894.8111

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்ணப்பரம்மானை.

ஈரோடு

மகாஜன ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

இயற்றியது.

ஸ்ரீ சங்கர் அச்சாபீஸ்,

ஈரோடு.

பதிப்புரிமை.]   1927   [விலை 4 அணா

சிறப்புப்பாயிரம்.

நீலாசலந்தழீஇய குன்னூர், திருவருள் நிலயத்துப் பாங்கரும்,

தமிழ்த்திருவாளருமாகிய

N. ராமசாமி பிள்ளையவர்கள் சொல்லிய

மதிப்புரைச் செய்யுட்கள்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கண்ணிருக்கு மணிபோலக் கடலுடுத்த குவலயத்தில் கனித மிழ்ப்பா
பண்ணிருக்கு மொழியாகப் பத்தியெனுங் கடல்குமுறப் படர்சீர் வாய்ந்த
எண்ணிருக்குங் கண்ணப்பப் பெருமானா ரம்மானை யினி துரைத்தான்
உண்ணிறுக்கும் உணர்வுடையான் உயரன்பு மென்னுடையான் ஒழுக்கமுள்ளோன்.

அம்மானைக் கரம்பிடித்தான் அணிமானை இடம்பிடித்தான் அருளே பூத்த
பெம்மானைப் பரமசிவப் பெம்மானை இருமூன்று தினத்திற் போற்றி
இம்மாயப் பிறப்பொழித்த பெருஞ்சரிதத் தம்மானை எளிதா யாருந்
தம்மாய தெனக்கொள்ளச் சாற்றினன் தெய்வசிகா மணியார் தானே.

சொன்னாலும் வ[illegible]கும் [illegible]ம்மனம் நின்றுலவுந் தொன்மை பெற்ற
தன்னாலுங் [illegible]ன்ற[illegible]ூர்ச் சேக்கி[illegible] சாற்றினார் முன்
என்றாலுங் [illegible]தொகுத்துரைத்[illegible]ன் [illegible]ள்ளிடைவெற் பெனவெவரு மெளிதா காணப்
பொன்னாலும் மணியாலும் பிரசித்தற்குக் கொடுத்தாலும் போதா வன்றே

224458

ஈரோடு திருவாளர்

ஈ. வே. கிருஷ்ணசாமி நாய்க்கரவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பண்டிதரும் பாமரரும் பாச்சுவைக ளொருங்கறிந்து பருகியுய்ய
மண்டனிலே மாபத்தி மாண்பதனை லங்தொன்று பொழுதைக் குள்ளே
விண்டலத்தை விமலனுட னாட்சிகொண்ட கண்ணப்பர் வியன்பேர் காதை
கொண்டசுவை யுலகுயரத் தெய்வசிகா மணியுரைத்துக் கொடுத்தான்மாதோ

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல்

தமிழ்ப் பண்டிதர் ந. சிவபாத ஹிருதயப்பிள்ளையவர்க ளியற்றிய

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

சிவபெரு மானே முழுமுத லன்றித் தெய்வம்வே றிலையெனத் தெளிந்து
அவனடிக் கன்பு பூண்டுநா ளாறில் அழகிதாங் கைலைசென் றடைந்த
தவமுரு வானகண் ணப்பரின் சரிதை சத்சனர் முதற்பல ருணர்ந்து
பவமெலாம் பாறப் பாரிலம் மானைப் பாவினத் தாற்பகர்ந் தனனே

பகர்ந்தவன் யாவ னென்னிலோசிவன்பால் பத்தியும் பண்புடை யாளர்
பகர்ந்தநன் னூலைப் பழுதற வுணர்ந்து பாவலர் நாவலர் பார்த்து
இகந்தனி லிவர்போ லிலையென மெச்ச வெழிற்கலை பலபல தேர்ந்த
உகந்தவென் னண்பர் ஒப்பிலாத் தெய்வ சிகாமணி யெனுமொள்ளி யோ
னே.

ஈரோடு தமிழ்த்திருவாளர் ம. ரா. சுப்பராயலு ரவுத்து

அவர்களியற்றியது.

வெண்பா.

உண்ணப்பா நல்லூனென் றுண்பித்தே யீசன்பால்
கண்ணப்புங் கண்ணப்ப ரம்மானை—மண்ணவர்கள்
உய்வடையச் செப்பினவ னுத்தமனும் பாவல்லோன்
தெய்வ சிகாமணியாந் தான்

031,87NDK
N27

ஸ்ரீ உபய வேதாந்தாச்சாரியராய் ஈரோட்டில் எழுந்தருளியிருக்கும் கோடி கன்னிகாதானம் திருமலை கோபாலதாத்தாச்சாரிய சுவாமிகள் குமாரர் பிர்மஸ்ரீ ஸ்ரீநிவாச தாத்தாச்சாரிய சுவாமிகளியற்றியது.

வெண்பா.

அண்ணப்ப ரம்மானை யார்கரத்தர் பாலன்பர்
கண்ணப்ப ரம்மானை காசினியில்—நண்ணுற்ற
மெய்வசன நூலோர் வியக்க விளம்பினன்
தெய்வ சிகாமணி தேர்ந்து.

ஈரோடு மஹாஜன உயர்தர பாடசாலைத் தலைமைத் தமிழாசிரியரும், சோதிட பண்டிதரும் ஸ்ரீமத் உபய வேதாந்தாச்சாரியருமாகிய நசையனூர் திருமலைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிகள் அருளிச் செய்தவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சிகரசிவ கிரிமருவுந் தலையநலூர்ச் சேர்ந்ததொரு முதன்மை யாளன்
புகழ்வளரு மெழுமாதைப் புறநகராம் வேலனகர் பொருந்தி வாழ்வோன்
மகபதியின் மருகனென வருங்குமர னடியிணையை மறவா நேசன்
திகழ் கூறை குலதிலகன் தெய்வசிகா மணியெனுநற் சிறந்த நாமன்

பாமரரும் பண்டிதரும் பகுத்தறியாப் பாலகரும் பாவை மாரும்
தோமறவே கற்றுணர்ந்து பேரின்ப சுகமடையச் சுருக்க மாகக்
காமருவுங் காளத்திக் கண்ணப்பர் சரிதமதைக் கனிவு கூர்ந்து
பாமலிசெந் தமிழ் மொழியி னம்மானைப் பாவதனிற் பகர்ந்திட் டானே

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவபக்த சிரோன்மணியாகிய

திருக்கண்ணப்பரம்மானை.

காப்பு.

விநாயகர் துதி.

ஆனைமுகத்தோனே ஆயன் மருகோனே
சேனைமுகத்தோனே சிவனார் திருச்சுதனே
கண்ணப்பர் தன்சரிதங் களையாதெடுத்துரைக்கக்
கண்மூன்றுடையோனே காத்தருளவேணுமையா.

சுப்பிரமணியர் துதி.

ஆறுமுகத்தோனே யழகுவள்ளி நாயகனே
ஏறுமயில் வாகனனே யெழிலார் முருகோனே
கருணைமிகவுடைய கண்ணப்பர் தன்சரிதம்
வருணனையாயுரைக்க வரமருளவேணுமையா.

சரஸ்வதி துதி.

வாணிகாயத்திரியே வாக்கிற் குரியவளே
பாணிமதிச்சடிலப் பரமனடியவராங்
கண்ணப்பர்தன்சரிதங் களங்கமிலாதுரைக்க
எண்ணத்திருந்திடுவா யெழிலார் கலைமகளே.

அவையடக்கம்.

காளத்திப் புராணமதில் கண்டவடியார் சரிதம்
பெரியவரே யானுரைக்கப் பிழைபொறுக்க வேண்டுகிறேன்.

நூல்.

நாட்டுச்சிறப்பு.

குங்குமங் கோட்டங் கொன்றையகில் தக்கோலம்
எங்கும் நிறைந்தே யெழிலாய்ச் செழித்தோங்கும்
மிளகுக் கொடிகளவை மேல்வளர்ந்து தானசையும்
மந்து லளாவியிடும் வான்மலைகள் சூழ்ந்திருக்கும்
புதுமை மிகவுடைய போத்தப்பி நாடதனில்
சந்தனக் கால்கள்நட்டுச் சவரிமயிரால் வேய்ந்து
வயங்கி விளங்கியிடும் வன்மையுள சிற்றில்கள்சூழ்
உடுப்பூரெனும் பெரிய வோர்குறிச்சி தானுமுண்டு
வேடுவர் தங்குடிகள் மிகவிளங்கு மவ்வூரில்
வீடுகளின் முன்புள்ள வேங்கை மரந்தனிலே
ஆடுகிற கொம்புகளி லழகாகத் தொட்டில்கட்டி
தொட்டி லதனுள்ளே துயிலக் குழந்தைகளை
இட்டுமே தாலாட் டிசைபாடு மாதரிசை
மலையி னருகுள்ள மயிலெல்லாங் கேட்டுறங்கும்
வேடச் சிறுவரது வீரந்தனை விரும்பி
ஆடற் புலிக்குட்டி யவர்பின் றிரிந்திடுமே
மாதர் தமது மண்ணிநடையைத் தாமறிந்து
ஆதர மாக வழகுபிடி வாரணங்கள்
கூடியே பின்றொடர்ந்து குணமாகத் தான்றிரியும்
ஏழு வயதான வெழிலார் சிறுமியர்கள்
கூடி விளையாடுதற்குக் கூட்டுவரே முத்துகளை
முத்துகளைக் கூட்டி முடிப்பார் சிறுவீடு
சிறுவீ டவர்கட்டிச் சிறந்து விளையாடுவரே
செழித்து விளைந்தோங்கும் தீதில் தினைப்புனத்தில்
பால்போல் மொழிபகரும் பைங்கிளியை யோட்டுகிற
மாதர் மொழிகேட்டு மாண்புள்ள காந்தருவர்
கானங்கள் பாடுகிற கைவீணை சோர்ந்திடுவார்
இவ்வித நல்வளங்க ளியைந்திருக்கு மவ்வூரில்

திரு அவதாரம்.

வில்வேடர் தங்களுக்கு வேந்தனாய் நாகனென்பான்
மனைவியாந் தத்தையொடு வாழ்ந்து சுகமாயிருந்தான்

இவ்வாறு தாம்வாழ்ந்து இருக்கின்ற காலமதில்
பிள்ளைப்பே றில்லாத பெருங்குறையைத் தானினைந்து
மனைவி முகம்பார்த்து மன்னனவ னேதுசொல்வான்
ஆசைக் கினியவளே அன்பிற் சிறந்தவளே
கேளடி பெண்மயிலே கிளிமொழியே என்வார்த்தை
அறிஞரிலா வவையும் அருளிலா நெஞ்சமும்போல்
கண்ணில் சரீரமும்போல் கமலமிலா வாவியும்போல்
மந்திரி யில்லாத மன்ன னரசாட்சியும்போல்
புத்திரனிலா வாழ்வும் பொருந்துமடி பெண்மயிலே
வாய்நீர் நனைக்கின்ற மார்போ டிளஞ்சிறுவர்
உந்தியுந்தி யேறுவதா லுண்டாகு மின்பமதே
உடம்பென் றுரைப்பார்கள் உத்தமர்க ளாரணங்கே
தளர்ந்த நடைச்சிறுவர் தம்வாய்ச்சொற் கேளாத
பொல்லாச் செவியதுவும் பொம்மைச்செவி யொக்குமடி
இவ்வுலக வின்பமொடு மறுவுலக வின்பமுமே
புத்திர னில்லார்க்குப் பொருந்துமா தில்லையென்று
மெத்த வுரைப்பார்கள் மேலோர்க ளாரணங்கே
என்றுபல பகர்ந்தே எற்றமுள்ள நாகனுமே
ஆளும் முருகன்றன் னடியிணையில் வீழ்ந்திறைஞ்சிப்
புத்திரனைப் பெற்றுப் பூரித்து வாழ்ந்திடுவோம்
மைந்தனைப் பெற்று மகிழ்வெய்தி வாழ்ந்திடுவோம்
சுதனரைப் பெற்றுச் சுகமெய்தி வாழ்ந்திடுவோம்
காதலனைப் பெற்றுக் கனமடைவோ மென்றுரைத்து
ஆண்டவன் வாழுதற்கு ஆலயங் கட்டுவித்துப்
பூசனைக ளெல்லாம் புகழாகத் தானடத்தி
ஆடும் மயில்சேவ லணியாக விட்டுமல்லோ
உடுக்கைபறை தத்தாரி யுயர்வாய் முழங்கிடவே
திருவிழா மிக்க சிறப்பாகத் தானடத்திப்
பூசை புரிகின்ற பூசாரியைக்கூவி
ஆடு மிடமதனை யழகுபெறத் தானமைத்து
வெறியாட் டயர்வித்தான் விழைவு மிகுதியினால்
அவ்விடத்தி லேயிருந்த அனைவர்களுந் தான்காண
வெறியாட் டிடந்தனிலே வேலாயுத முருகன்
பூசாரி மேற்றோன்றிப் புகல்வா ரிதுசெய்தி

அன்பனே நீசெய்த அரிய சிறப்பினுக்கு
மெத்த மனமுவந்தேன் மேதினியெலாம் புகழும்
புத்திரனை யான்றருவேன் புண்ணியா வென்றுரைத்தார்
நாகனுந் தத்தையுமே நல்வசனங் கேட்டவுடன்
பாதமலர் மேல்வீழ்ந்து பணிந்து புகழ்ந்தெழுந்தார்
அருட்கட லாமுருக னப்பொழுதே தான்மறைந்தார்
பூசாரியார் தமக்குப் பூஞ்சிறப்புத் தான்செய்து
உறவினரெல்லோர்க்கும் உவகைமிகத் தான்செய்து
நாகன் மனைவியொடு நன்றாய் மனமுவந்து
வாழ்கின்ற காலமதில் வண்ண நடையாளும்
நாட்கள் சிலகழிய நல்லகருத் தானடைந்தாள்
உண்டுகொ ளென்னுமவ ளிடையுருத் தெரிந்ததுவே
கோங்கின் முகையன்ன கொங்கை முகக்கண்கள்
கருத்துப் பருத்தனவே காரிகைக்கு அன்னாளில்
தோள்க ளிரண்டுந் துணையா யிளைத்தனவே
உடம்பும் வெளுத்ததுவே யுணவும் வெறுத்தனளே
புளிரசந் தான்பிழிந்த புளித்தசோ றுண்ணுதற்கு
விளங்கு மிடையாட்கு வேட்கைமிகத் தோன்றினதே
அன்னம்போல் மெல்லியலி னழகுநடை யோய்ந்ததுவே
இவ்விதமாய்க் கருப்ப மிவளடைந்து தான்வரவே
தத்தை மொழியாளுந் தன்குலமாசைத் துடைக்கும்
பொன்னை நிகர்த்தவொரு புனிதமக னீன்றனளே
மணியை நிகர்த்தவொரு மைந்தனை யீன்றனளே
பெறுதற் கரிதான பிள்ளைபிறந் தானென்று
நாகனடைந்த வின்பம் நவில முடியாது
தத்தையடைந்த வின்பஞ் சாற்ற முடியாது
இன்பமிக வடைந்த இறவுளர்தம் வேந்தனுமே
வெற்றிவே லேகரத்தில் விளங்கும் பெருமாற்கு
மயில்வாகனமுடைய மறவர் வள்ளி நாயகற்கு
குன்றுகள் தோறுமுறை குமார வடிகளுக்கு
அன்புகொள் மனத்துடனே யருஞ்சிறப்புச் செய்தனனே
பெண்களு மாண்களுமாய்ப் பேருவகை தானெய்தி
எண்ணெய் விழாநிகழ்த்தி யின்ப மடைந்தனரே
வாசனை தான்கலந்த வண்ணநீர் தானூட்டிப்

பருத்தமுலைப் பாலூற்றிப் பண்பாய் நிலந்தேய்த்த
அழகிய பொட்டதனை யணிந்துமுலைப் பாலூட்டி
ஆனையின்கொம்புகளா லமைத்த தொட்டில் தானேற்றி
நீராட்டி யலங்கரித்து நேரிழையுந் தான்கொடுக்க
நன்மகனைக் கையாலே நாகனவன் றூங்கிடவும்
திண்ணென் றிருந்ததனால் திண்ணனென்று நாமமிட்டான்
ஆனையின் றந்தங்களா லமைத்தசைபூந் தொட்டிலின்மேல்
வானில் வளர்கின்ற வளர்மதியம் போல்வளர்ந்தான்
திருப்பாற் கடலலைமேல் சேஷசய னந்தனிலே
கண்வளர் துழாயலங்கல் காகுத் தனைப்போல்வான்
தென்றல்மிக வீசுகின்ற தெளிவுள்ள நீரதனில்
மதிய மசைவதுபோல் வதனமது தானசைய
கமல மசைவதுபோல் கவின்கொள் முகமசைய
மலர்வா யமுதொழுக மார்பைமே லேதூக்கி
சிலைமறவர் குலதிலகன் செங்கீரை யாடினனே
மதியந் தவழ்வதுபோல் மாண்புடனே தான்றவழ்ந்து
அரன்குமரன் றிருவருளா லவதரித்த திருமைந்தன்
பூமல ரடிசுமக்கப் புவிமகள்செய் புண்ணியத்தால்
பூமிமேற் பாதம் வைத்துப் புண்ணியனுந் தானடந்தான்
குன்றி மணிக்கோவை குமரனிடை தான்விளங்கப்
புலியின் னகமாலை புண்ணியன் கழுத்திலங்கச்
சிறுவர்கள் தம்முடனே சிறுதே ருருட்டியங்கு
சிறுமியர்கள் முத்துகளால் செய்தசிறு வீடுகளை
அழித்துவிளை யாடினனே யானருள்கொள் மைந்தனுமே
மூங்கிற் சிறுகோலை மூரிவில்லாய் வளைத்து
நாரின் சிறுகயிற்றை நாணாகத் தானிசைத்துக்
கையிலே தானெடுத்துக் கார்வேடர் மைந்தருடன்
காட்டிலே தான்புகுந்து கடுவிலங்கின் குட்டிகளை
எய்துவிளையாடி யெழிலான திண்ணனுமே
பொன்னிளமான் கன்றுகளைப் புலியினிளங் குட்டிகளைக்
கரடியின் குட்டிகளைக் கடமானின் கன்றுகளைப்
பிடித்துமே தான்வளர்த்துப் பெருமையுடன் றான்வளர்ந்தான்

திண்ணன் வில்பிடித்தல்.

வில்வித்தை கற்பிக்க வேண்டும் பருவம்வர

நாகனத் தேயத்து நல்வேடரை யழைத்து
வில்லின் விழாவதனை விமரிசையாய் நடத்திப்
பின்புசிலை யாசாற்குப் பெருஞ்சிறப்புச் செய்தடிகேள்
என்றன் குடிநிறுத்த மிந்தவிளையோன் றனக்கே
அன்புடன் வில்வித்தை யருள்செய்ய வேண்டுமென
கருணையுடன் வில்வித்தை கற்பிக்க வேண்டுமென
நல்ல முகூர்த்தமதில் நற்சிலையைத் தானெடுத்துத்
திண்ணனார் தன்கையில் தேசிகனுந் தான்கொடுக்க
அழகுபெற விழியி லஞ்சனமை தான்தீட்டப்
பூமியி னுள்ளிருக்கும் பொருட்புதையல் காண்பதுபோல்
முன்பிறப்பி லேபயின்ற மூரிவில் வித்தையெலாம்
வில்லைப் பிடித்தவுடன் விளங்கியதே திண்ணருக்கு
அரியதோர் வில்வித்தை யனைத்தும் நிரம்பினதே
அவ்விடத்தி லேயிருந்த அனைவர்களுந் தான்பார்த்து
அருச்சுனன் றானே அவதார மென்றுரைத்தார்

கன்னி வேட்டை.

இவ்விதமாய் விளங்கு மெழிலான திண்ணரையே
கன்னிவேட்டை யாடுவிக்கக் கருதியந்த நாகனுமே
இடையூறுகளின்றி யினிதாகக் கைகூட்டும்
வனதெய்வங் கொள்ளுகிற வலியபலி தான்செலுத்த
வேடர் குழாங்களுடன் விரைவாய் வனமடைந்து
பூஞ்சுனையி னீராடிப் புதியமலர் தான்பறித்து
விழுதுவிட் டுத்தழைத்து வெகுதூர நீண்டதுவும்
ஆரணிய தேவதைக ளன்புடனே வாழுவதும்
ஆனதொரு நல்ல வாலமரந் தானடைந்து
வண்ணமலர் மாலைகளால் மாண்பாகத் தான்புனைந்து
கவரிமயிர்க் கற்றைகளால் கானவருந் தான்புனைந்து
பூசை புரிபவனும் பூசாரியைக் கூவிப்
பூசை புரிவித்துப் புதிதான குங்கிலியங்
காடு முழுதுங் கமழும்படி புகைத்து
ஆட்டுக் கடாக்கள் தனை யணியாய்ப் பலியிட்டு
மூங்கிலரி சிச்சாதம் முப்பழமுங் காய்கிழங்கும்
தேனுந் தினைமாவுந் தீம்பாலின் சாதமுமே
தேக்கிலை களிற்பரப்பித் தேவதைக்குத் தான்படைத்தான்

மறவர்க ளெல்லோரும் வணங்கித் துதித்தனரே
மறத்தியர்க ளெல்லோரும் மாண்பாய் வணங்கினரே
குறத்திய ரெல்லோருங் குணமாய்த் துதித்தனரே
அட்டினி ரத்த மானாவியுள்ள சேடைதனை
நேரிழை யார்களது நெற்றிதனி லேசாத்திப்
பிரசாதந் தான்கொடுக்கப் பிரியமுட னுண்டனரே
மதுவின் றெளிவதனை மாண்பாகத் தாமருந்தி
ஆலம் விழுதுகளி லரிவையரும் வேடர்களும்
ஊசல்க ளாடி யுவந்து விளையாடினரே.
புங்க மரங்களது புதிய நிழல்தோறும்
பொழுது புகாதிருண்ட பூஞ்சோலைகள்தோறும்
போக நுகர்ந்தனரே பொலிவுள்ள வேடர்குழாம
மலையி லிருந்துவிழும் மணியருவி தான்பார்த்தும்
மயிற்சலங்க ளாடுவதை மாண்புடனே தான்பார்த்தும்
மலையினெதிர் சென்று யாண்புடனே தான்கூவி
எதிரொலி தனைக்கேட்டே யின்ப மடைந்தனரே
ஆண்மை மிகுந்த அறிவுள்ள நாகனவன்
வேடர் மகளிரொடு விரைவாக வூரடைந்தான்
மற்றைநாட் காலையிலே மைந்தன் றனையழைத்து
ஐயனே இன்றுமுத லரசனுய் நீயிருந்து
வேடர்களைக் காத்து வெம்பகைவர் தங்களையே
அழித்து மவர்க ளரசாட்சி கைக்கொண்டு
வெற்றிமிக வடைந்து வேந்தேநீ வாழ்ந்திடுவாய்
என்றுமிக வாழ்த்தி யெழிலான நாகனவன்
வழிவழி யாய்வந்த வயமுடைய வில்லதனை
புதல்வன் றன்கையில் பொருந்தவே தான்கொடுத்து
நம்மை—ஆளுங்கடவுளவ ரழகுள்ள செவ்வேளின்
அருளின் றுணையாலே யையனே நீசென்று
கன்னி வேட்டந்தானுடிக் காலையே நீவருவாய்
என்று விடைகொடுக்க வெழிலான திண்ணனவன்
தந்தையின் றாள்வணங்கித் தாயாரடி பணிய
தாயாரு மாங்கே தன்மகனைத் தான்பார்த்து
மரகதமே கண்மணியே மதகளிறே நீவருக
என்றுசொலித் தன்மகனை யினிதாகத் தான்றழுவி

மலையை நிகர்த்துள்ள மாமுலையில் பால்சோர
உள்ளங் குழைந்துமவ ருச்சிதனை மோந்தனளே
கண்ணே மணியேநீ கடுங்காட்டிற் செல்லாது
தண்ணிய சோலைத் தடமாக நீசென்று
வேட்டங்களை முடித்து வேடர் குழாத்துடனே
திரும்பி வரும்போது திருஷ்டிகள் யாவுமின்றி
முட்கீறு யாவுமின்றி முருகுடையோய் நீவருவாய்
மேக மனையாயென்று வெண்ணீறு சாத்தினளே
மைந்தனவன் பின்னும் மாதாவைத் தான்வணங்கி
விடையது தான்பெற்று வீரனவன் றுனிங்கி
கச்சைதனைக் கட்டிக் கடிவா ளதிற்செருகி
பூந்தளிர்க ளாற்றொடுத்த பூமாலை தானணிந்து
தோலின் செருப்பதனைத் தொட்டுமந்த வீரனவன்
வில்லதனை நாணேற்றி வீரமுடன் றன்வளைத்தான்
தாய்தந்தையர் கேட்டுச் சந்தோஷங் கொண்டிடவே
மரத்திற் பறவையெலா மருண்டு பறந்தோடிட்டவே
மிருகங்களின் கூட்டம் வெருண்டோடிப் போயிடவே
நாணிதனைத் தட்டி நடுங்குமொலி செய்தனனே
வில்லம்பு வாளேந்தி வேடர்புடை சூழ்ந்துவர
கொல்லடி பிடிதூரத்துக் குத்துவெட்டு என்பாரும்
எய்வா யெறிந்திடுவா யென்றூர்க்குஞ் சொல்லினரும்
மேகமனையாரும் மேன்மேலுஞ் சூழ்ந்துவர
வேட்டைநாய்க் கூட்டமொடு விரைவாய் வனமடைந்தான்
சுற்றி வலைவீசிச் சூழ்பறைகள் தான் முழக்கி
மிருகங்களை யெழுப்பி வேடரவ ரேதுசெய்வார்
வலையில் புகத்துரத்தி வலியகவண் கல்வீசி
கரடிபுலி பன்றி கட்மான் முதலான
வலியவிலங்குகளை வலைப்பரப்புள் விட்டனரே
வலைப்பரப்புளே விட்டு மறைந்து நின்றார்வேடர்
வலையுட் கிடக்கின்ற வலியவிலங்கின்றொனியால்
கிட்டிவருகின்ற கேழல்மான் கூட்டமெலாம்
பட்டு விழுமாறு பகழிகளை யெய்தனரே
வேட்டைநாய்க் கூட்டமெலாம் விரைந்துசென்று தான்றடுக்க
சீறித் தவிக்கின்ற சிலமிருகக் கூட்டங்களை

நீலமலை போன்ற நிகரில்லா யானைகளை
வேலினால் குத்தினரே வீரமுள்ள வேடர்சிலர்
செடியில் மறைந்திருந்த சிலவேட ரேதுசெய்தார்
அம்புகளைச் சொரிந்து அரியபுலி பன்றிகளை
யானை கரடிகளை யதஞ்செய்து வீழ்த்தினரே
இந்த விதமாக வெழிலான திண்ணனவன்
வேட்டங்கள் தான்முடித்து வேடருட னூரடைந்தான்
அன்னையு மத்தனுங்கண் டகமகிழ்ச்சி கொண்டிடவே
பின்னும் பலதடவை பெருவேட்டந் தாளுடி
திண்ணனவன் மூனுந் திறலாய் விளங்குகையில்
வேட்டைக ளாட விரும்பியவ னோர்நாளில்
அம்பு புகாதடர்ந்த வாரணியந் தானடைந்து
வேடர்களி னீங்கி வெகுதூரந் தான்புகுந்து
உலாவித் திரிந்ததனு லுத்தமனுந் தானிளைத்து
தழைத்துச் செழித்தவொரு தருவின் னிழலதனில்
தன்னந் தனியனாய்த் தானுறங்கும் வேளையிலே

சிவபெருமான் திண்ணனார் கனவில் தோன்றுதல்.

அன்புக் கெளியவனு மாறணிந்த வெம்பெருமான்
அருச்சுனர்க்குப் பாசுபத மந்நாளி லேயீந்த
பாசுபாத மூர்த்தி பரமசிவ னேதுசெய்தார்
வெள்ளை நிறமான விபூதியினைத் தானணிந்து
பாவங்களை யோட்டும் பசுமமதைத் தானணிந்து
இடையிற் புலித்தோலை யீஸ்வரருந் தானணிந்து
அரையிற் புலித்தோலை யாண்டவருந் தானணிந்து
சடைமுடிகள் தான்புனைந்த தம்பிரான் கோலமொடு
திண்ணனார் தன்கனவில் தெரியும்படியாய் நின்று
மைந்தனே யிந்த மலையடிவா ரந்தனிலே
பொன்முகரி யாற்றின் புனிததீ ரந்தனிலே
கல்லா லடியிலே கனத்ததொரு லிங்கமுண்டு
துன்பங் களையெல்லாந் தூற விலக்கிடுமே
பேரின்ப மெல்லாம் பெருக வளித்திடுமே
சென்று வணங்கிடுவாய் திண்ணாநீ யென்றுரைத்து
மகிழ்ந்து வணங்கிடுவாய் மதவலியே யென்றுரைத்து

இறைவர் மறைந்தருள வினிதான திண்ணனவன்
கண்கள் தனைவிழித்துக் கனவாச் சரியமுற்றுத்
திக்கெலாம் பார்த்தானே திறனுள்ள திண்ணனுமே

தெய்வ பக்தி.

அந்தச் சமயத்தி லரியபெரும் பன்றியொன்று
வேடர்கள் தம்மாற்பால் வெகுவிரை வாயெழுந்து
மலைப்பக்க மோடுதலை மைந்தனவன் கண்டானே
கண்டு சோபத்துடனே கடிதாய்த் துரத்தினானே
ஆல மரத்தி னருகிலே சென்றவுடன்
சிவலிங்கந் தன்னருகே சென்று மறைந்ததுவே
அளவி லடங்காத வாச்சரியந் தானடைந்து
மறைந்த தென்னேயென்று மைந்தனவ னின்றானே
எதிரே சிவலிங்க மிருந்ததைக் கண்டானே
கண்ட வுடனேசீ காளத்தி யப்பரது
திருவருட் பார்வைதனைத் திண்ணனவன் றானடைந்து
இரதந்தனிற் றோய்ந்த இரும்பது வுந்தானும்
தரிசன வேதிகையைத் தானெதி ரிரும்பதுவும்
அவ்வுருவந் தான்மாறி யம்பொனுரு வாவதுபோல்
முன்குணங்கள் யாவுமின்றி முழுது மொழிந்திடவே
ஆண்டகை கடவுளிடத் தன்புருவ மாயினனே
பலநாட் பிரிந்துவந்த பால னிளமகனைத்
தான்கண்ட தாயார்போற் றுழாது தானேடி
தோள்க ளழுந்தும்படி தாய்யவனுந் தான்றழுவி
மோந்து மனமுருகி முத்தங்க ளிட்டானே
கண்களி னீரொழுகக் கார்மேக மேதுசொல்வான்
உடம்பின் மயிர்சிலிர்க்க வுத்தம னேதுசொல்வான்
குருடன்றன் கைக்கிடைத்த குருமணியைப் போலாக
எழையேனுக் கைய னிவ்விடத்தி லேகிடைத்தான்
என—அளவி லடங்காத வானந்தந் தான்மிகவாய்ப்
பெருகுதலாற் சிரித்துப் பின்புமவ ரேதுசொல்வார்
ஆனைபுலி சிம்மங்க ளடர்ந்து திரிகின்ற
கானகத்து ளெந்தாய்நீ காவல்துணை யில்லாமல்
வேடர் தமைப்போல விமலாநீ யிங்கிருக்கக்

காரணங்க ளென்ன கடவுளே யுன்றனுக்கு
ஊனு முணவு முண்ணென் று யார்தருவார்
தேனுந் தினைமாவுந் தீங்கனியுங் காய்கிழங்கும்
மானும் முயல்பன்றி வல்லுடும்பி னூணவும்
உண்ணுதற் குதவிடுவே னுத்தமனே நன்றான
வேடர்துணை யதுவும் வேண்டுமெனி லுண்டதனுல்
என்னூரை நீகாண்பா யெங்கள் பெருமானே
வாவென்று நின்றானே வண்மையுள வெம்பெருமான்
சாமிநீ யிக்காட்டில் தனித்துறைதல் யான்சகியேன்
என்னோ டுடுப்பூருக் கிக்கணமே நீவருவாய்
நீமன மிரங்கிடுவாய் நிமலாவென் கண்மணியே
என்று பலசொல்லு மெழிலான வன்பனது
அன்புப் பெருக்கினுக்கோ ரளவுகரை யில்லையம்மா
இறைவன் மறுவார்த்தை யேதுஞ் சொலாதிருக்க
சங்கரன் மறுவார்த்தை சற்றுஞ் சொலாதிருக்க
இறைவர் திருவுள்ள மிவ்விடத்தி லேபோலும்
கடவுள்திரு வுள்ளமிந்தக் கானகத்தி லேபோலும்
சிறியவ னுனிந்தத் தெய்வ சிகாமணியை
நீங்கினு லென்னுயிர்தா னிமிஷமு நில்லாது
பிரிந்துவிடி லென்னுயிரு போகுமே தப்பாது
என்று மனமுருகி யீஸ்வரன்முன் னின்றானே
ஈசன் முடிமேலே யினிதாக நீராட்டி
வாசங் கமழுகின்ற மலர்கூ விளஞ்சூட்டி
இருந்ததைத் தான்பார்த்தே யிறைவர்தமக் கேற்றபணி
இதுவே யெனத்துணிந்தே யேந்தலவன் பற்றினனே
உச்சிப் பொழுதாச்சே யுத்தமன் பசித்தனனே
நண்பக லாயினதே நாதன் பசித்தனனே
இறைச்சி தனைக்கொணர்ந்தே யிவர்க்கூட்ட நானீங்கில்
கொடிய மிருகக் குழாங்கள் மிகவெய்தி
அடிகள் திருமேனிக் கல்லல் விளைத்திடுமோ
துட்ட மிருகந் தொடர்ந்தென்ன செய்திடுமோ
என்றுசொலி யன்ப னிரங்கிமனந் தானுருகி
எந்தை பெருமானுக் கெரிபசி மிகாதமுன்னே
சென்று கணப்பொழுதில் சேகரித்து நான்மீள்வேன்

என்றன்ப னிச்சயித்தே யெங்கள் பெருமானே
உன்றன் பசிதணிக்க ஊனிறைச்சி கொண்டுமல்லோ
தாமத மில்லாமல் சணப்பொழுதிலே மீள்வேன்
சற்றுங் கணப்பொழுதுந் தாமதங்கள் செய்யேனே
வழங்கு மிருகங்கள் வந்திடுமென் றஞ்சாதே
விலங்குகள் வந்தாலும் விரைந்தென்னைக் கூவிடுவாய்
என்று—விண்ணப்பஞ் செய்து விரைந்தரிதிற் றுனீங்கி
கைகூப்பித் தான்வணங்கிக் காளையவன் றுனீங்கி
கன்றைவிட் டுப்பிரியுங் காலைப்பசுப் போலாக
அடிக்கடி திரும்பிநின்றே யையர்தனி மைக்கேங்கிக்
கடுங்காற்றைப் போல்விரைந்து காளைவனந் தானடைந்து
பருத்துக் கொழுத்தவொரு பன்றிதனை யெய்தேந்தி
அலைகள் தனைவீசி யதிவேகமாய்ச் செல்லும்
பொன்முகரிக் கரையைப் புண்ணியனுந் தான்சார்ந்து
செழித்தமர நிழலில் சேவகனுந் தான்வைத்துத்
தீக்கடையுங் கோலாலே தீயதனை யுண்டாக்கிப்
பன்றிதனைத் தீய்த்துப் பரிவுடன் வாளதனல்
இனியசுவை மிகுந்த விறைச்சிகளைத் தானறிந்து
ஆராய்ந் தறுத்தெடுத்து அம்பதனி லேகோத்துப்
பதங்கள் பொருந்தியிடப் பண்புடனே தான்காய்ச்சி
வாயதனி லேயிட்டு வகையாய்ச் சுவையறிந்து
பல்லினல் மெல்லமெல்லப் பன்முறையுந் தானதுக்கி
நல்ல இறைச்சிகளை நலமான தேக்கிலையால்
தைத்தவொரு தொன்னையிலே தன்மையுடனே வைத்து
இனியசுவை யில்லாத இறைச்சிகளைத் தானெறிந்து
தளிர்கள் மலர்கொய்து தலையதனி லேசொருகி
சிவனருக் காட்டுகிற தீர்த்தமதை வாய்முகந்து
தீந்தசை யமுதுபெய்த தேக்கிலையை யோர்கையில்
மற்றுமொரு கைதனிலே வண்மையுடன் வில்லேந்தி
விரைந்துபுற ப்பட்டானே வேட்கையுள்ள வீரனவன்
அதிகப் பசியதனு லாண்டவ ரிளைத்தனரோ
அடர்ந்த விலங்குகளா லச்ச மடைந்தனரோ
ஐயோ வெனப்பதைத்தே அன்பினல் குஞ்சுகட்கு
இரையது தான்கொடுக்க எகும் பறவையென

ஈசர்தம் பாலோடி எந்தை பெருமானே
நீயன்வரத் தாமதிக்கத் தீப்பசியால் வாடினீரோ
என்று மனங்கரைந்தே யீசர்முடி மேலுள்ள
பத்திர புஷ்பங்களைப் பாதரட்சைக் காலாலே
தள்ளி யொதுக்கியவன் றன்வாயி னீராலே
மேனியோ டுள்ளம் மிகக்குளிர நீராட்டித்
தளிரும் மலரதனைத் தலைவளைந்து தான்சூட்டி
திருமுன் னிலைக்கலத்திற் றீந்தசையைத் தான்படைத்து
எந்தை பெருமானே யினிதாக வுண்டிடுவாய்
ஐயா மரகதமே யார்வமோ டுண்டிடுவாய்
என்றினிய வார்த்தை சொலி யின்பமுட னூட்டியபின்
சாமியெதிராகச் சந்தோஷங் கொண்டு நின்றான்
அவ்வேளையில் வேட ரன்புடைய திண்ணரையே
காணாமலச்ச முற்றுக் காடெலாந் தேடிவந்து
மானம ளாவியுள்ள மலையினருகாக
ஆலமரத் தடியி லாண்டவர் முன்னிலையில்
நீலமலைபோல நிற்பவரைக் கண்டாரே
அருகிற்போ யையாவே யடியேங் களையகன்று
நீங்கிவந் திம்மலையி னிற்கின்ற காரணமென்
யாங்களுமக் கேதேனு மரியபிழை செய்ததுண்டோ
மத்தியானந் தாண்டினதே மன்னுபசித் திலதோ
இங்குநீ வந்தசெய்தி யெளியே மறியோமே
விரைந்து வாராததனால் வேந்தே முனியாது
எங்களுடன் வருவா யென்றுபல வாறுரைத்தும்
எதிர்மொழி கொடாமையினா லேங்கிமனந் தானிரங்கி
இங்குள்ள தெய்வந்தா னிவர்மீதி லேறியதோ
யாதோ வறியோமே பரசனுக் கென்னசொல்வோம்
மதயானை போலவென்றன் மைந்தனெங் கேயென்று
தத்தையவள் கேட்டால் தப்புவதற் கென்னசொல்வோம்
என்று மனங்கலங்கி யிளைத்துநின்ற வேடரவர்
தப்ப வுபாயமின்றித் [illegible] ரவர்
இறைவ னிடமாக விச்செயலை நாங்கூறி
அழைத்துவரு வோமாயி னவரிந்தத் தேவதையின்
பயித்திய நீங்கிடவே பரிகாரஞ் செய்திடுவார்

என்று துணிந்து எகினரே வேடரவர்
அந்தச் சமயத்தில் ஆதவனு மேதுசெய்தான்
திண்ணனவன் பேரன்பைச் செப்புவோம் வேறுலகில்
என்று துணிந்தவனு யேகினுன் மேற்குமலே
மேற்கு மலேயதனில் மேவினதே பேரிருளும்
மாணிக்கக் கற்களவை மாண்பா யொளிக்தலினுல்
அன்பனின்ற வம்மலேயி லற்பவிருளும் மிலேயே
திண்ணனவ னப்போது சிவபெருமான் றன்னேத்
தீய மிருகங்கள் தீண்டுமே யென்றஞ்சி
துட்ட மிருகங்கள் தொடருமே யென்றஞ்சி
அம்பு தொடுத்து அரியவில்லேக் கையேந்தி
மறந்துங் கண்ணிமையாது மழவிடையுந் தான்காத்து
விடியு மளவும் விமலனெதிர் நின்முனே
அருண னுதயந்தோன்ற வமலர்க் கமுதாக்கச்
சிந்தனே கொண்டவனுய்த் திரண்டமலேச் சாரலிலே
போயினு னன்பனவன் புனிதமாய்க் காலேயிலே

சிவகோசரியார்.

அறிவு அருளடக்கம் அரியசிவ பத்திகளும்
ஆசையின்மை யுண்மையுடன் அருவிரதங் கல்விகளும்
ஒன்முய்த் திரண்டே யோருருவ மானவரும்
இன்பதுன் பந்தன்னே யிணேயாய் நினேப்பவரும்
சவுந்தரிய மாதர்கள் தாமாய்த் தழுவினுந்தன்
தாயாரென வெண்ணுந் தபோதன சிகாமணியும்
சிவபூசை யொன்றனேயே செய்தொழிலாய்க் கொண்டவரும்
திருக் காளத்திநாதனையே தினமும் விதிப்படியே
அருச்சிப் பவரான அரியசிவ கோசரியார்
பிராதக் காலத்தெழுந்து பெருமைபெற்ற பொன்முகரி
ஆற்றிற குளித்து அழகான வெண்ணீறு
போற்றிப் புனேந்து புகலுமநுட் டானங்கள்
சாற்றும் முறைப்படியே தப்பாமல் தான்முடித்து
ஈசன் றிருமுடியி லெழிலாக வாட்டுதற்கு
பொன்முகரி யாற்றின் புனிதநீர் தான்மொண்டு
கமனியத் தண்குடத்தைத் தலேயிற் சுமந்துகொண்டு

அன்றலர்ந்த பூக்க ளழகாகத் தான்பரித்து
கையதனி லேதாங்கிக் காளகண்டன் றன்னாமம்
வாயிற் புகன்று வழியதனிலே நடந்து
அந்தணர் சிரேட்டனவ னாண்டவர்முன் போயினனே
கடுக்கை மதிபுனைந்த கடவுளவர் சந்நிதியில்
ஊன்கள் கிடப்பதனை யுத்தமனுந் தான்பார்த்தே
உள்ள நடுநடுங்கி யுடனே குதித்தோடி
விண்ணோர்முடி மணிகள் விளங்கிக் கிடந்தொளிரும்
தேவாதி தேவர் திருமுன் னனுசிதமாம்
இக்கொடிய பாவமதை யியற்றினவர் யாவர்களோ
கொல்லாமை யறியாமைக் குணமாகக் கொண்டொழுகும்
பொல்லாத சிலைவேடப் புலைஞரே செய்திடுவார்
அல்லார்க ளிச்செயலுக் கணுவுமனங் கொள்ளார்கள்
அவர்க ளிதுசெய்ய ஆண்டவ னிசைந்தனரோ
அன்புடை யோர்கண்டா லப்போ துயிர்விடுவார்
பொல்லாத வென்னுயிரைப் போக்காது நிற்கின்றேன்
என்று பலசொல்லி யிணையிலான் றானழுது
கடவுள் பூசைக்காலங் கடந்திட நின்றதனால்
பலன்யா துளவென்று பரிவுடனே தானினைந்து
பாமிசங் களையெல்லாம் மாற்றினா லேயகற்றி
நன்றாய்த் துடைத்து நல்லாவின் னீர்தெளித்து
பின்னு மவர்சென்று பெருந்தீர்த்த மூழ்கிவந்து
ஆரண மந்திரத்தா லசுத்தங்களைப் போக்கி
வானவர் கோன்முடியில் வளமாக நீராட்டி
அழகு மலர்கொண்டு அருச்சனை தான்புரிந்து
கடவுள்திரு முன்னின்று கரங்கள் சிரமேற்குவித்து
கண்க ளிரண்டினுங் கரைந்துநீர் தான்சொரிய
உடம்பின் மயிர்சிலிர்க்க வுத்தமனுந் தானுருகி
மன்னு மனத்தோடு மறைக்கீதம் பாடினனே
பலகால் வலம்வந்து பரமனைத் தான்வணங்கி
அரிதாக நீங்கியவ ராச்சிரமந் தானடைந்தார்
அருச்சுன மூர்த்தி யன்புள்ள திண்ணனவன்
அரியமான் பன்றிகளை யம்புகளி னாலெய்து
பழையபடி யமுதம் பரமருக்குத் தானமைத்து

கொம்புத்தே னூற்றிக் கொண்டிறைவ ஞர்பசிக்கும்
ஆற்று ரெனவோடி யாண்டவர் பூசைசெய்து
தாளா ரெனவோடித் தம்பிரான் பூசைசெய்து
அன்பா லமுதூட்டி யாண்டவ ருகு நின்ருன்

பெற்ருேர் துயரம்.

அவ்வேளை வேடர்களா லரும்புதல்வன் றன்செய்தி
தந்தைதா யுங்கேட்டுத் தணியா வழுகையுடன்
வந்துபல மந்திரத்தால் வசியங்கள் செய்தனரே
தம்வசப் படாமையினல் தளர்ந்துமனம் புண்ணுகி
செய்வதினி யென்னவென்று செம்மலைவிட் டேகினரே
தாய் தந்தையரழுது தாம்வந்து போனதையும்
சற்று மறியாமல் சாமியொடு தான்பிணித்த
மனத்தை யுடையவனுய் மாமிருகக் கூட்டங்களை
எய்து பகலெல்லா மிறைவர்க் கமுதூட்டி
நித்திரை சிறிதுமின்றி நீண்டவிருட் காலமெலாம்
பத்திரமதாகப் பரமனைத் தான் காத்து
ஆண்டவ ருகுநின்றே யரியதொண்டு செய்துவர

கண் அப்புதல்.

சிவகோச மாமுனியுந் தினமும்வந்து சந்நிதியில்
ஊன்கள் தனைப்பார்த்து உள்ளமது தானடுங்கி
அழுதிரங்கி யேங்கி யகற்றியே சுத்திசெய்து
ஆலமர் கடவுளையே யந்தணனும் பூசைசெய்து
மனதிற் றுயரடைந்தே மாமுனியுந் தொண்டுசெய
ஐந்தாநா ளிரவி லவர்கனவி லேயெழுந்து
காளத்தி யப்பர் கருணையுடன் கூறுகிருர்
அறத்துறையி லேபயின்ற அந்தணர் சிகாமணியே
இங்குநம்முன் னீகண்ட திறைச்சியென்று நையாதே
அதுநா மருந்துகிற வாரமுதந் தானுகும்
பெருதற் கரிதான பேரமுதந் தானுகும்
தானந் தவம்புரிந்து தன்விதியைத் தான்வென்று
பெற்றதன் பிள்ளையின்மேல் பெற்றவள் தனக்கிருக்கும்
புதியவன் பெவ்வளவோ புண்ணியனுக் கென்மேலே
அவ்வள வன்பாகும் அருந்தவனே நீயறிவாய்

அவன்செருப்பின் றன்காலா லந்தணனே நம்முடியில்
பூக்களையுங் காலமதில் புண்ணியா வென்னெஞ்சம்
இளமகன் கையாலே யேர்முல்லையைத் தான்றடவப்
பெற்றதாய் நெஞ்சம்போல் பெரிது முருகிடுமே
ஐம்பொறியை வென்றவனே யவனம்மே லேயுமிழ்நீர்
அகங்கரைந்து மேற்பெருகும் அன்பா யிருத்தலினல்
மறைமந் திரமோதி மாமுனிவ ராட்டுகிற
மாநதியின் நீரான மஞ்சன நீர்தன்னிலுமே
மெத்தவுகப் பெனக்கு விப்பிரனே நீயறிவாய்
மாதவர் சாத்துகிற மந்திர மலர்களினும்
அவன்கழுத்தைத் தான்வளைத்தே யன்புடனே சூட்டுகிற
தளிரும் மலர்களுமே தானினிமை யென்றனுக்கு
அவன்றனது வாயிலிட்டு ஆராய்ந்து தானெடுத்து
இளஞ்சூட்டுடனே யிடுமிறைச்சி யுண்ட பின்பு
அமரர் களூட்டுகிற வமுதமிக வெனக்கு
வேம்பும் விடமும்போல் மிகவும் வெறுப்பாயினதே
எம்முனவ னின்று இயைந்த பேரன்புடனே
வாய்திறந்து சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டமுதல்
அந்தணர் பாடுகிற வரியமறைக் கீதமெலாம்
இனிதா யிருந்திலதே யென்னன்பா வென்றுரைத்து
அவன் மனநங்கோயிலவ னுரைகளே வேதம்
அவன் செயல்களெல்லாம் அறச்செயல்க ளேயாகும்
அவனியல்பு காட்டுகிறே னன்பாநீ நாளைவந்தே
அவனறியா வண்ணம் அயலில் மறைந்திருப்பாய்
இனித்துயரை நீக்கிடுவா யென்றிறைவன்றான் மறைந்தான்
சிவசிவா வென்று சிவகோசர் தானெழுந்து
ஆண்டவாருள் மொழியை யன்புடனே தானினைந்து
அதிசயந் தானடைந்து ஆதவன் புலர்வதன்முன்
பொழுது விடிவதன்முன் பொன்முகரியின் மூழ்கி
நித்தியக் கருமங்களை நியமமாய்த் தான்முடித்து
அண்ண லருச்சனையை யன்புடனே தான்முடித்துத்
தூய லிலிங்க சொரூபத்தின் பின்னொளிந்து
நேய மதாயந்த நிகழ்வதனைத் தானறிய
ஆவலா யைய ரங்கு மறைந்திருந்தார்

முனிவர் வருமுன்பே மொய்கானஞ் சென்றிருந்த
திண்ண னவனுந் திறல்வேட்டந் தானாடி
விமலர்க் கமுதுகொண்டு விரைவாய்த் திரும்புகையில்
துன்பங் களைக்காட்டுந் துர்ச்சகுனங் கண்டானே
வழியிலே யான்கண்ட மர்மச் சகுனமெலாம்
பழிகளை யுண்டாக்கும் பாழாச் சகுனமதே
என்னமோ பாவ மிரத்தக்குறி காண்கிறதே
எந்தனுயி ராமீசர்க் கென்னகுறை நேர்ந்ததுவோ
ஏதோ வறியேனே யென்றுமனந் தானடுங்கி
ஒய்யென்று காளையவ னோடோடித் தான்வரவும்
ஆண்டகை திண்ணனது அன்பு முழுவதையும்
அந்தணர்க்குத் தான்காட்ட ஆண்டவனுந் தானினைந்து
வலதுகண்ணி லேயுதிரம் வடியும்படி தானினைந்து
நின்றார் சிவபெருமான் நீர்மையுள்ள திண்ணனவன்
உம்பர் பெருமான் கண்ணி லுதிர மொழுகுதலைக்
கண்டவுடன் வாய்நீருங் கையிலுள்ள வூன்சிதற
அம்புங் கொடுஞ்சிலையும் அவ்விடத்தி லேவீழ
குடுமிதனிற் செருகுங் குளிர்ந்தமலர் தானிறைய
ஆட்டுங் கயிறதுவும் அற்றவுடனே வீழும்
நாடகப் பொம்மையென நம்பியவன் வீழ்ந்தானே
நெடும்பொழு துள்மூச்சு நின்றே யிறந்தவன்போல்
கிடந்துதுன்ப மெய்திடலால் கெடுநினை வடைந்தெழுந்தே
ஓயாத் துயரமதா லுள்ளமும் மூழ்கிடவே
ஏறுண்ட சிங்கம்போ லேந்தலவன் வாய்திறந்து
கண்ணீர் சொரிந்திடவே கதறியவன் றானழுது
உதிரஞ் சொரிந்திடவே யுத்தமனுங் கையாலே
மார்புமுகம் வீங்கிடவே மைந்தனவன் றானடித்துத்
தலைபிளந்து போம்படியாய்த் தம்பிகல்லின் மோதினனே
ஓடுவான் மீள்வான் உடனே விழுந்திடுவான்
உருள்வா னெழுந்திடுவான் ஓவென்று தானிமிர்வான்
ஐயோ வெனக்கதறி யார்த்தபெரு மூச்சிடுவான்
மனமது வாடிடுவன் வாய்திறந்து தன்முகத்தைக்
கையாலே மூடிடுவன் கரைந்துகரைந் தேயழுவான்
கைகள் தனை யெடுத்துக கல்மீது தான்மோதி

எந்தை பெருமானுக் கித்தீங்கு செய்தோர்கள்
விரோதிக ளாயுள்ள வேடரவர் செய்தாரோ
மலையதனி லேதிரியும் வல்விலங்கு செய்ததுவோ
யாதோ வறியேனே யப்பகைவரைக் காணில்
அவர்களுயி ருண்ணு தப்பால் விடுவேனோ
மலையதனி லேவாய்த்த மாமணியே யையாவே
செம்பொன் னொளிமலையே சீருள்ள நின்கண்ணில்
உதிரமொழுகுதற்கே யுற்றதொரு காரணமென்
திருவாய் திறந்திலையே தெய்வமே யென்றிரங்கி
ஆவியது சோர்ந்தே யண்ணு லருகிற்சென்றே
கையிலே தான்றுடைத்துங் கறையிரத்தந் தானொழுக
ஐயனை யேதழுவி யழுதா னெடுநேரம்
பையெனவே விடுத்துப் பச்சிலை மருந்துகொண்டு
பிழிந்தால் நோய் தீருமென்று பெயர்ந்தான் மருந்துகொய்ய
காடுமுழு தும்புகுந்து கண்டனவெலாம் பறித்து
விரைந்தோடி யேவந்து வேலையெரித்தார் விழியில்
பிழிந்தா னிரத்தமது பீசகா தொழுகியதே
உதிரமது நில்லாம லொழுகுவதைக் கண்டானே
ஆவி தளர்ந்தானே அன்புடைய நண்பனவன்
இனியிதற் கென்னசெய்வே னென்றெண்ணி நின்றானே
ஊனுக்கு னிடல்வேண்டு மென்னுமொழி தோன்றினதே
தன்கண் ணதைத்தோண்டித் தற்பரன் கண்ணில்வைத்தால்
இந்தநோய் தீர்ந்திடுமே யென்றவனுந் தான்றுணிந்தே
கணையாலே தன்கண்ணைக் காளையவ னுந்தோண்டி
பரமசிவ னார்கண்ணில் பார்த்தவனு மப்பிடவே
அம்பிகை யோர்பாகர் அவ்விரத்த மாற்றினரே
கண்டவுட னேதின்னன் களிப்புமிகத் தானடைந்து
மத்தளம் போற்றோளை மகிழ்ந்தவனுந் தான்கொட்டி
ஆர்த்துத் திசைதோறும் அன்பனவ னோடினனே
உடம்பு குலுங்கும்படியா யுத்தமனுந் தான்சிரித்து
வாயில்வந்த வண்ணமெல்லாம் மாண்பாகப் பாடினனே
கைகள்தனைக் கொட்டிக் கானவனு மாடினனே
குதித்துக் குதித்தார்த்துக் கொற்றவனுந் தானின்று
காடிநான் செய்தசெயல் நன்றுநன் றெனப்புகழ்ந்தே

உவலைக் கடலதனி லுலாவுகிற வேளையிலே
செம்மலவன் றனது சிறந்தபே ரன்பதனைப்
பின்னுமே காட்டுதற்குப் பெருமானுந் தானினைந்தே
இடதுகண்ணிலே யுதிர மிழியும்படி செய்தனரே
அச்செயல் திண்ணாது ஆனந்த வாரிதியைப்
பருகிவிட வேபாலன் பதைபதைத்துத் தான்கலங்கி
எரிவாய் நரகத்து ளிடர்கள்தனை யடைந்தோன்
சொர்க்கத்தி லேயறிச் சுகங்கள்தனை யடைந்தே
மற்றுமே யந்நரகில் வந்துவீழ்ந் தாற்போல
சந்தோஷந் தான்மாறிச் சார்ந்துள்ள துக்கமெனும்
சமுத்திரத்தி லேயழுந்தித் தானேங்கிக் கண்ணொனுமோர்
மருந்தை யுடைமையினால் மன்னவனுந் தான்றெளிந்தே
மருந்தையோ கைகண்டேன் மற்றெனக்கோர் கண்ணுளதே
இதற்குநா னஞ்சேனே யென்றவனுந் தான்றுணிந்தே
தன்கண் களைந்தவுடன் றம்பிரான் கண்ணறிய
ஓர்செருப் பின்காலை யிறைவர்கண்ணி லேயூன்றி
அம்பைத்தன் கண்ணில்வைத்தா னச்செயலை எம்பெருமான்
சகிக்க முடியானாய்த் தன்மைமலர் வாய்திறந்து
பொறுக்க முடியானாய்ப் பூமலர் வாய்திறந்து
கண்ணப்ப நிற்க கண்ணப்ப நிற்க
கண்ணப்ப நிற்கவெனக் கருணைவடி வெம்பெருமான்
முக்கால் மொழிந்துகொண்டே முதிர்ந்தவன்பன் றன்காத்தைக்
கறைநாகக் கங்கணம்பூண் கரமதனி லேபிடித்தார்
பிர்மாதி தேவரெலாம் பெருவியப்புத் தானடைந்தே
பூமி நிறைந்திடவே பூமாரி பெய்தனரே
கானவர் தந்தலைவன் கையிலுள்ள கூர்ங்கணையை
வீசி யெறிந்து வேணியரன் பாதமலர்
தந்தலை மேற்புனைந்தான் றகையாக வம்மானை
அதியாற்புத மடைந்த அரியசிவ கோசமுனி
சிவபெரு மானுடைய திருவடியைத் தான்பணிந்தார்
கங்கைமதி வேணிக் கா[illegible]பெருமான்
கைதவ மிலாதவனைக் கருணையங் கண்ணானோக்கி
அழலெனடு நின்றே யலையுமனந் தானொடுக்கி
அரியதவம் புரியும் அருந்தவர்க்குங் கிட்டாத

03/87 N01C
N27
224448